**செ.வெ. எண்: 406** **நாள்: 4.7.2011**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (4.7.2011) தலைமைச் செயலகத்தில், திருவள்ளூர் மாவட்டம், திருவொற்றியூர் குப்பம், எண்ணூர் பகுதிகளைச் சேர்ந்த கடலுக்கு மீன்பிடிக்க சென்று காணாமல் போன மூன்று மீனவர்களின் பெற்றோர்களிடம் மீனவர் நல வாரியத்தின் மூலம் நிவாரணத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சம் வீதம், ரூபாய் 3 இலட்சத்திற்கான காசோலைகளை வழங்கினார்கள்.

திருவள்ளூர் மாவட்டம், திருவொற்றியூர் குப்பத்தைச் சேர்ந்த திரு. இரவி (வயது 23), த/பெ. கிருஷ்ணன், திரு. பன்னீர்செல்வம் (வயது 20), த/பெ. இரவி மற்றும் எண்ணூரைச் சேர்ந்த திரு. சுதாகரன் (வயது 24), த/பெ. சக்கரவர்த்தி ஆகிய மூன்று மீனவர்களும் கடந்த 17.5.2010 அன்று TN 01 FRPC 1708 என்ற படகில் கடலுக்கு மீன்பிடிக்க சென்று, கரை திரும்பவில்லை. இதனால் காணாமல் போன மீனவர்களின் குடும்பத்தை சேர்ந்தவர்கள் ஓராண்டு காலமாக மிகுந்த துன்பத்திற்கு ஆளாயினர்.

இந்நிலையில், தமிழக முதலமைச்சராக செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு, காணாமல் போன மீனவ குடும்பங்கள் அளித்த கோரிக்கை மனுக்களை கனிவுடன் பரிசீலித்து, அம்மீனவர்களின் குடும்பங்களுக்கு மீனவர் நல வாரியத்தின் மூலம் நிவாரணத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சம் வீதம், ரூபாய் 3 இலட்சம் வழங்கிட ஆணையிட்டார்கள். அதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் ஜெ ஜெயலலிதா அவர்கள் காணாமல் போன மூன்று மீனவர்களின் பெற்றோர்களிடம் நிவாரணத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சம் வீதம், ரூபாய் 3 இலட்சத்திற்கான காசோலையினை இன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்கள், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை செயலாளர், மீன்வளத்துறை ஆணையர் ஆகியோர் உடனிருந்தனர்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.

நாள்: 4.7.2011